# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூலை 04, 2026

Weekly E-paper ● July 04, 2026




# அப்பட்டமான ஆர்.எஸ்.எஸ். ஆட்சி!

சுப.வீரபாண்டியன்

## ஜாதி ஒழிப்பே, சமூக விடுதலை!

முனைவர் காந்தி பாபு

## சட்டிசுட்டதடா... கைவிட்டதடா

தலையங்கம்

## அங்கே அவர்! இங்கே இவர்!

எழில்.இளங்கோவன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - ஜூலை 04, 2026 Weekly E-paper ● July 04, 2026


# அப்பட்டமான ஆர்.எஸ்.எஸ். ஆட்சி!

சுப.வீரபாண்டியன்

ஆட்சி நிர்வாகத்தில், அடக்குமுறைகளில், அள்ளிவிடும் பொய்கள் மற்றும் அவதூறுகளில், அப்படியே இன்னொரு பாஜக அல்லது ஆர் .எஸ்.எஸ் ஆட்சி தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறதோ என்கிற அச்சம் நாட்டைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது!


அங்கே பிரதமர் மோடி அதிகம் பேசுவதில்லை. ஊடகங்களைச் சந்திப்பதில்லை! திட்டமிடுவது, பேசுவது எல்லாம் அமித் ஷாதான்!

அதே பாணிதான் இங்கும் பின்பற்றப்படுகிறது. முதலமைச்சர் விஜய் அதிகம் பேசுவதில்லை. ஊடகங்களைச் சந்திப்பதில்லை. ஆனால் அவருக்கும் சேர்த்து ஆதவ் அர்ஜுனா எல்லாவற்றையும் பேசுகிறார். அல்லது ஆர் .எஸ்.எஸ் காரரான நிர்மல் குமார் அளந்து விடுகிறார்!

குதிரை பேரம் நடத்திச் சட்டமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவதிலும், அது பாஜகவின் முறையைத்தான் தவெகவும் பின்பற்றுகிறது!

நாளுக்கு நாள் அடக்கு முறையும் கூடிக் கொண்டே போகிறது! இன்று காலையிலிருந்து, எல்லா ஊடகங்களிலும் திமுக சட்டமன்ற உறுப்பினர் அனிதா ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டது தான் தலைப்புச் செய்தி!


எதற்காகக் கைது செய்யப்பட்டார் ? முதலமைச்சரை ஒருமையில் பேசி விட்டாராம்! தேர்தலுக்கு முன்னால் நடந்த பரப்புரைக் கூட்டங்களில் ஆதவ் அர்ஜுனா அன்றைய முதலமைச்சர், நம் தலைவரை எவ்வளவு



தரக்குறைவாகப் பேசினார்! முட்டாள் முதலமைச்சர் என்னும் அளவுக்குக் கீழ்த்தரமாகப் பேசிய அந்த உரைகளை நாடு ஒரு நாளும் மறக்காது!

ஆனால் கைது செய்யப்பட்ட அனிதா ராதாகிருஷ்ணன், தன்னை தவெக வில் சேரும்படி கட்டாயப்படுத்தினார்கள் என்கிறார். அதை மறுத்துப் பேசிய அமைச்சர் நிர்மல் குமார், அனிதாவைப் போன்ற ரவுடிகளை எல்லாம் நாங்கள் எங்கள் கட்சியில் கெஞ்சினாலும் சேர்க்க மாட்டோம் என்று திமிராக விடை சொல்கிறார். ஒரு சட்டமன்ற உறுப்பினரை ரவுடி என்று சொல்வது எந்த விதத்தில் நாகரிகம் ?

மறுபடியும் ஜெயலலிதா முதலமைச்சராக இருந்த 1991- 96 காலகட்டத்தை நோக்கி நாடு கடந்து கொண்டிருக்கிறதோ என்று தோன்றுகிறது!







# ஜாதி ஒழிப்பே, சமூக விடுதலை!

**முனைவர் காந்தி பாபு**

மயிலாடுதுறை மாவட்டம் சாத்தங்குடிகிராமத்தில்நிகழ்ந்துள்ள ஆதி திராவிட சமூகத்தைச் சார்ந்த இளைஞர் பார்த்திபன் மற்றும் வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த திவ்யதர்சினி இருவரின் ஜாதி ஆணவப் படுகொலை , தமிழ்நாட்டின் மனசாட்சியை மீண்டும் உலுக்கியுள்ளது. காதலித்த ஒரே காரணத்திற்காக, அடித்துக் கொல செய்யப்பட்டுத் தூக்கில் தொங்கவிடப்பட்டுள்ள கொடூரத்தைப்பார்க்கும்போது,நாம் வாழும் சமூகம் இன்னும் எத்தகைய காட்டுமிராண்டித்தனமான ஜாதியப் பிடிக்குள் சிக்கியிருக்கிறது என்பது வெட்கக்கேடாக உள்ளது.






**“தமிழ்நாடுஅரசுவெறும்காவல்துறைவிசாரணையோடு நின்றுவிடாமல், ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக, கல்வி நிலையங்கள் முதல் பொதுவெளி வரை தந்தை பெரியாரின் ஜாதி ஒழிப்பு மற்றும் மனிதநேயச் சிந்தனைகள் தீவிரமாக விதைக்கப்பட வேண்டும்.”**

ஜாதி ஆணவப் படுகொலைகள் ஏதோ தனிநபர்களுக்கு எதிரான வெறும் கொலைக் குற்றங்கள் மட்டுமல்ல; அவை ஒட்டுமொத்த மனிதத்தன்மைக்கும், ஜனநாயக விழுமியங்களுக்கும் எதிரானது என்பதை உணர்த்த வேண்டியது நம் அனைவரின் சமூகப் பொறுப்புணர்வாகும். மேலும் தந்தை பெரியாரின் ஜாதி ஒழிப்புச் சிந்தனைகளும், ஜாதி மறுப்பு , மத மறுப்புக் காதல் மற்றும் சுயமரியாதைத் திருமணங்களின் தேவையும் ஏன் இன்றும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன என்பதை நாம் அரசியல் மற்றும் சமூகக் கண்ணோட்டத்துடன் விவாதிக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஜாதி என்பது வெறும் சமூகப் பிரிவு மட்டுமல்ல, அது ஒரு படிநிலை ஆதிக்கம். இந்த ஆதிக்கத்தின் அடித்தளமே அகமண முறை (Endogamy) எனப்படும் "சொந்த ஜாதிக்குள்ளேயே திருமணம் செய்து கொள்ளும்" மரபுதான். ஜாதி என்னும் கோட்டையைத் தகர்க்க வேண்டுமானால், அதன் அடித்தளமாக இருக்கும் திருமண முறையை மாற்றியமைக்க வேண்டும் என்பதைத் தந்தை பெரியார் மிக ஆழமாக வலியுறுத்தினார்.

பெரியாரைப் பொறுத்தவரை, காதல் திருமணங்கள் என்பவை வெறும் இரு மனங்கள் இணைவது மட்டுமல்ல, அவை ஜாதிச் சுவர்களை உடைத்தெறியும் அரசியல் ஆயுதங்கள். வெவ்வேறு ஜாதியினரிடையே மலரும் காதல், ஜாதித் தூய்மை (Caste Purity) என்ற கற்பிதத்தைத் தகர்க்கிறது.

காதலை வெறும் ஒழுக்கப் பிரச்சினையாகப் பார்க்கும் ஒரு சமூகம், அதைத் தண்டிப்பதாகக் கூறிக்கொண்டு ஆயுதங்களைக் கையில் எடுப்பது எவ்வளவு பெரிய அநீதி? ஜாதிப் பெருமை, குடும்ப கௌரவம் என்ற பெயரில் நிகழ்த்தப்படும் இந்தப் படுகொலைகள் உண்மையில் வன்மத்தின் உச்ச வடிவம்.

பார்த்திபன், திவ்யதர்ஷிணி போன்ற இளைஞர்கள்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!
கருஞ்சட்டைத் தமிழர்

## சட்டிசுட்டதடா...கைவிட்டதடா

’தமிழ்நாடுஇப்போதுவிஷத்தைக்குடித்துவிட்டது.அதைக் காப்பாற்றத் தாயும் ஆனவராக விளங்கும் ஸ்டாலினால் தான்முடியும்’என்று ஆன்மீகச்சொற்பொழிவாளர்சுகிசிவம் அவர்கள் ஓர் அரங்கக் கூட்டத்தில் பேசியிருந்தார். அதே கூட்டத்தில் ஆலகால விஷத்தைத் தொண்டையின் நடுவில் தடுத்தாட்கொண்டார் சிவனாகிய நிலகண்டன் என்றும் சொன்னார். இன்றைய தமிழ் மக்களின் நிலையும் அதுதான், மெல்லவும் முடியவில்லை, விழுங்கவும் முடியவில்லை, தவிக்கிறார்கள்.

’நாம் 108 தொகுதிகளில் வெற்றிபெற்றாலும், ஆட்சிநிலைக்குமா’ நீடிக்குமா என்ற பயம் பற்றிக் கொண்டுள்ளது முதல்வராக இருக்கும் ஜோசப் விஜய்க்கு.

அதனால்தான் ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பார்களே, அப்படி அதிமுகவில் ஆள் பிடிக்கும் வேலையில், அதாவது குதிரைபேரம் என்று சொல்கிறார்களே அந்த பேரத்தில் இருக்கிறார் அவர். காரணம் அமைச்சரவைக்குப் பெரும்பான்மைக் கோடாகிய 118 தொகுதிகளையாவது பெறவேண்டும் என்று அவர்களை விசில் ஊதவைக்கப் பார்க்கிறார்.

கூட்டணி கட்சிகள் இருக்கின்றனவே என்று கேட்கலாம். அவர்களுக்கு எங்கே இருக்கிறது கூட்டணி? அக்கூட்டணியின் பெயர்தான் என்னவாம்?

தான் எழுதிய மூதுரையில் பிற்கால ஔவையார் சொல்வது போல ’அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகள்’ போன்ற காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்ட்டுகள், இ.யூ.முஸ்லிம் லீக், மதிமுக கட்சிகள் எப்படிக் கூட்டணிக் கணக்கில் சேரும்?

உண்மையைச் சொன்னால் விஜய், இவர்கள் யாரையும் நம்பியதாகத் தெரியவில்லை. எரியும் அடுப்பில் கொள்ளிகளை எப்போது பிடுங்கி விடுவார்களோ என்ற அச்சம் அவருக்கு இருக்கிறது.

இவர் குதிரை பேரம் தான் செய்கிறார் என்று இவரின் அரசியல் பங்காளி வைகோவே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து விட்டாரே!

இரண்டு விஜயபாஸ்கர்கள் உள்பட தவெகவில் சேர்ந்து ’தவெக அழுக்கு மிஷினில்’ துடைத்துக் கொண்டவர்கள், எதிர்வரும் இடைத்தேர்தலில் வேட்பாளர்களாக விசிலை எடுத்துக் கொண்டு வரட்டும்பார்க்கலாம்என்றுகாலியானதொகுதிகளில் காத்துக் கொண்டு இருக்கிறார்கள் மக்கள்.

அவர்கள் ஊதப்போகும் விசில் ஓசையில், அறுநீர்ப் பறவைகள் என்ன செய்யும்? விஜய் என்ன செய்வார்?

இந்த நேரம் பார்த்து "சட்டிசுட்டதடா... கைவிட்டதடா" டிஎம்எஸ் பாட்டு கேட்கிறது பாருங்கள்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை
இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

தங்களின் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் அடிப்படை உரிமையைக் கூட இந்தச் சமூகம் மறுக்கிறது என்றால், இங்கு தனிமனித சுதந்திரத்திற்கு என்ன மதிப்பு இருக்கிறது? ஜாதி வெறி என்பது மனித நேயத்தையும், சக மனிதனை நேசிக்கும் தன்மையையும் முற்றிலுமாக அழித்துவிடுகிறது.எனவே பெரியாரைத் தங்கள் கொள்கைத் தலைவராகக் கொண்டுள்ளதாகக் கூறும் தவெக அரசு, ஜாதி வெறியால் தூண்டப்படும் குற்றங்களைச் சாதாரணக் கொலையாகப் பார்க்காமல், கடுமையான பிரிவுகளின் கீழ் விசாரிக்க ஒரு தனிச்சட்டத்தை உடனடியாகக் கொண்டுவர வேண்டும் . மேலும், சாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியருக்கு அரசு உடனடியாகப் பாதுகாப்பும், வாழ்வாதார உதவிகளும் வழங்க வேண்டும்.

அத்தோடு நில்லாமல், இத்தகைய வழக்குகளை மாதக்கணக்கில் இழுத்தடிக்காமல், சில வாரங்களுக்குள் விசாரித்து குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை பெற்றுத் தர வேண்டும்.

பார்த்திபன் மற்றும் திவ்யதர்சினி படுகொலையே கடைசியாக இருக்க வேண்டும். தமிழ்நாடு அரசு வெறும் காவல்துறை விசாரணையோடு நின்றுவிடாமல், ஜாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிராக, கல்வி நிலையங்கள் முதல் பொதுவெளி வரை தந்தை பெரியாரின் ஜாதி ஒழிப்பு மற்றும் மனிதநேயச் சிந்தனைகள் தீவிரமாக விதைக்கப்பட வேண்டும்.

“ஜாதி ஒழிய வேண்டுமானால், ஜாதி மறுப்புத் திருமணங்கள் தாராளமாக நடக்க வேண்டும். காதலும், சுயமரியாதையுமே மனிதனை அடிமைச் சங்கிலிகளில் இருந்து விடுவிக்கும்" என்கிறார் தந்தை பெரியார்.

# அங்கே அவர்!

● எழில்.இளங்கோவன்

தமிழ்நாட்டைக் காக்கும் பொறுப்பும், கடமையும் திமுகவுக்கு அதிகமாக இருக்கிறது. தமிழ்நாட்டைச் சீரழிய விடக் கூடாது. தேர்தல் எப்போது வேண்டுமானாலும் வரலாம். விரைவில் வரலாம், 3 மாதங்கள் கழித்தும் வரலாம், 6 மாதங்கள் கழித்தும் வரலாம்' என்று தலைவர் ஸ்டாலின் அவர்கள் பேசினார். சட்டம், ஒழுங்கு சீர்கேடு அடைந்திருக்கிறது. குழந்தைகள் - பெண்கள் மீதான பாலியல் கொடுமைகள் பெருகிக்கொண்டு இருக்கின்றன. போதைப் பொருள்கள் விற்பனை சரளமாகி நாடு சீரழியும்போது அதுகுறித்துப் பேசவேண்டிய முதல்வர் விஜய் வாயை மூடிக்கொண்டு இருக்கிறார். செய்தியாளர்களைக் கண்டால் ஓடி ஒளிந்து இருப்பதெல்லாம் சரியாம். ஆனால் திமுகழகத் தலைவர் ஆட்சி கவிழும் என்ற நிலை வரும் என்று சொன்னால் மட்டும், ஸ்டாலின் அரசியல் உயரத்தைப் பற்றிப் பேசுகிறார் மு.வீரபாண்டியன். சரி! கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் உயரம் அன்றும், இன்றும் என்ன என்பதை அவர் அறியாமல் இருக்க மாட்டார், என்றாலும் நினைவூட்டுவது நம் கடமை.



1936ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், திருத்துறைப்பூண்டியில் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் கிளை தொடங்கப் படுவதற்கு முன்னால், இந்திய அளவில் கம்யூனிஸ்ட்டுகளின் செயல்பாடுகளை தடுக்க 1923ஆம் ஆண்டு, பெஷாவர் சதி வழக்கு, 1924இல் கான்பூர் சதி வழக்கு, 1929இல் மீரட் சதிவழக்கு என்றும், தலைமறைவு வாழ்க்கை என்றும், போராட்டங்கள்,கைது - சிறை என்றும் வளர்ந்தது கம்யூனிஸ்ட் இயக்கம். ம.சிங்கார வேலர், ப.ஜீவானந்தம், எஸ்.வி. காட்டே, பி.சுந்தரய்யா, பி.ராமமூர்த்தி, பி.சீனிவாசராவ், கே.முருகேசன், நாகர்கோயில் சி.பி.இளங்கோ, திருத்துறைப்பூண்டி முருகேசன் போன்ற தன்னலமற்ற தோழர்களால் வளர்ந்தது கம்யூனிஸ்ட் இயக்கம். 1952 ஆம் ஆண்டு முதல் பொதுத்தேர்தலில் 131 இடங்களில் போட்டியிட்டு, 62 இடங்களில் வெற்றி பெற்றது கம்யூனிஸ்ட் கட்சி.

அவ்வளவு உயரத்தில் இருந்த கம்யூனிஸ்ட் கட்சி 2026ஆம் ஆண்டில் 5 தொகுதியில் போட்டியிட்டு திருத்துறைப்பூண்டி, தளி ஆகிய இரண்டில் மட்டும் வெற்றிபெற்ற, கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் உயரம் குறைந்து போனது ஏன் என்ற கேள்விக்கு தோழர் வீரபாண்டியன் தான் பதில் சொல்ல வேண்டும்.

# இங்கே இவர்!

'எங்களை அடித்தால் திருப்பி அடிப்போம்' என்று திமுகவைப் பார்த்து ஏன் பதற்றப் படுகிறார் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர்?

1967ஆம் ஆண்டில் இருந்து காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டு மக்களிடம் அல்லவா மாறிமாறி அடிவாங்கிக் கொண்டு இருக்கிறது? காங்கிரஸ் கட்சியின் வரலாறு அவருக்குத் தெரியவில்லையோ?



1952 ஆம் ஆண்டு சென்னை மாகாணச் சட்டமன்றத் தேர்தலில் 152 இடங்களில் வென்றது காங்கிரஸ். அதே தேர்தலில் முதன்முதலாகக்கட்சி அங்கீகாரம் இல்லாததால் சுயேட்சைகளாகப் போட்டியிட்டு 15 இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றது திமுகழகம்.

1967ஆம் ஆண்டு நிலைமை தலைகீழாக மாறி 138 இடங்களில் வென்று ஆட்சி அமைத்தது திமுகழகம். 'மக்கள் கொடுத்த பலமான அடியால் 152 இல் இருந்து சடசடவெனச் சரிந்து 51 ஆகி, அதுவும் 2026, இப்பொழுது 5 ஆகச் சுருண்டு போனது காங்கிரஸ். மக்கள், வாக்குகளால் கொடுத்த அடிகளை வாங்கிக் கொண்ட காங்கிரஸ்,

திமுகவிடம் எங்கப்பன் குதிருக்குள் இல்லை, திருப்பி அடிப்போம் என்று திமுகவிடம் வாலாட்டுகிறது.

திமுகவைப் பொறுத்தமட்டில் காங்கிரஸ் ஒரு கொசுறு. கொசு துள்ளக் கூடாது. அடிப்பார்கள் மக்கள். வேடிக்கை பார்க்கும் தி.மு.கழகம்! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian